*2011 ஆகஸ்ட் 30*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடியிலிருந்து சென்னைக்கு பேருந்து வசதி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த வழித்தடம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய அடர்வு இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**73—**

**நியாய விலைக் கடை**

***67—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சி தொகுதியில் நியாய விலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் புதியதாக பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*பொள்ளாச்சி வட்டத்தில், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 56 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இந்த 56 வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை தவிர, மேற்படி வருவாய்க் கிராமங்களின் அருகிலுள்ள 21 குக்கிராமங்களிலும் பகுதி நேரக் கடைகள் இயங்கி வருகின்றன. பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 103 கடைகள் முழு நேரக் கடைகளாகவும், 33 கடைகள் பகுதி நேரக் கடைகளாகவும் இயங்கி வருகின்றன. பொதுமக்கள் பகுதி நேரக் கடைகள் கோரி விண்ணப்பிக்கும்பட்சத்தில், அரசு விதிகளின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு,*

தகுதியின்பேரில் பகுதி நேரக் கடைகள் இயங்க அனுமதி வழங்கிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர ரேஷன் கடை அமைப்பதில், 150 குடும்ப அட்டைகள் வேண்டுமென்ற விதிமுறை இருக்கின்றது. அது 1½ கிலோ மீட்டருக்கு உள்ளே இருக்கின்ற கிராமங்களுக்கு என்று விதிமுறை இருந்தாலும், எனது தொகுதியில் 4, 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பொது மக்கள் ரேஷன் பொருட்களை வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதிலே இந்த 150 ரேஷன் கார்டுகள் என்ற விதிமுறையைத் தளர்த்தி, அந்தப் பகுதிகளுக்கும் பகுதிநேர ரேஷன் கடையைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரதான நியாய விலைக் கடையிலிருந்து பகுதி நேர நியாய விலைக் கடை பிரிப்பதற்கான வரையறைகள் வகுக்கப்பட்டு, அதற்கான முழு அதிகாரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே குறைந்தது 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்; புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பகுதிநேரக் கடைக்கு குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரதான கடைக்கு 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். மற்றும் பகுதிநேரக் கடைகளுக்குரிய இடம், போக்குவரத்து மற்றும் பணியாளர் நியமனம் தொடர்பாக ஏற்படும் செலவுகள் அனைத்தும் அரசால் வழங்கப்படமாட்டாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாமல் உள்ள இனங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் தளர்வு செய்யவேண்டிய இனமாக இருப்பின், மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசின் அனுமதி பெற்று பகுதிநேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2011 ஆகஸ்ட் 30]*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

**திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவையான நியாய விலைக் கடைகள் என் தொகுதியில் பல இடங்களில் இல்லை. ஆகையால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 500 ரேஷன் கார்டுகள் உள்ள பகுதிக்கு, முழுநேர நியாய விலைக் கடை அமைத்துத் தந்தால் அதற்கு அரசு அங்கீகாரம் அளிக்குமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டுக்கொண்டதுபோல, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தரப்படுமானால் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக முழுநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

**திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கரியமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட பேகாரஅள்ளி ஊராட்சியில் தாய்க் கடையில் 1,507 குடும்ப அட்டைகள் உள்ளன. அதிலிருந்து கடந்தகால 2001 முதல் 2006 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 3 பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டுவிட்டன. ஒன்று சுண்ணாம்புப்பட்டி, இன்னொன்று குட்டம்பட்டி, இன்னொன்று பட்டகப்பட்டி. ஆக, 4–வது கடையாகப் பிரிப்பதற்கு ஜோதிப்பட்டி என்ற கிராமத்தில் 163 குடும்ப அட்டைகள் உள்ளன, 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. 4–வது பகுதிநேரக் கடையாகப் பிரிப்பதற்கு விதியில் வழிமுறைகள் இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்க வேண்டுமென்றாலும் அதன்படி 163 கார்டுகளுக்கு ஒரு கடை ஆரம்பிக்கப்பட்டால் தாய்க் கடையில் 634 கார்டுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த*

*4—வது கடையை ஜோதிப்பட்டி கிராம மக்கள் பயனைடையும் வகையில் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று தாங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, ஒவ்வொரு பகுதியிலும் 3 கடைகள், 4 கடைகள் என்று பிரிக்கும்பட்சத்தில் அந்தப் பிரதான தாய்க் கடையும் பகுதிநேரக் கடையாக மாறக்கூடிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்ட அந்த இடத்திற்கு சட்ட விதிகளுக்குட்பட்டு அமைக்க வேண்டியிருப்பின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதற்கும் ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளில் வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் மட்டும்தான் பணியாளர்கள் வந்து பணியாற்றுகிறார்கள். சுய உதவிக் குழுக்களின் சொர்க்கம் என்று அழைக்கப்படும், எங்களை வாழ வைக்கிற மாட்சிமை பொருந்திய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுய உதவிக் குழுக்களின்மூலம் முழு நேரமாக பகுதி நேரக் கடையில் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, அரசாணைக்கு உட்பட்டு தளர்வு செய்ய வேண்டிய இனங்களில் அந்தக் கடைகள் முழு நேரக் கடைகளாக அமைக்க முடியுமானால், அதையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கவனத்தில் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2011 ஆகஸ்ட் 30]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிப் பகுதியில் 1–வது வார்டில் 1,638 கார்டுகள் ஒரு கடையில் இருக்கின்றன. அதை வளையநந்தர் கிராமத்தில் 225 கார்டுகள் தனியாக பகுதி நேரக் கடையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் இந்தப் பகுதியில் அதிகமாக கார்டுகள் இருப்பதால் அதைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஜே.ஆர். அவர்கள் கூறுகின்றபோது அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறினார்கள். வைகை நகர் போன்ற பகுதிகளில் 242 கார்டுகள் இருக்கின்றன. அவற்றிற்காக முழுநேரக் கடையிலிருந்து பகுதி நேரக் கடை பிரித்துத் தரப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறிய பதில்தான். மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாமல் உள்ள இனங்களில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதுபோல தளர்வு செய்ய வேண்டிய இனமாக இருப்பின் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**74—**

### சுகாதார நிலையம்

***1130—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*